செய்தி வெளியீடு எண்: 162 நாள்: 21.02.2011.

## முதுகுளத்தூர் அருகே நிகழ்ந்த அசம்பாவித சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே நிகழ்ந்த அசம்பாவிதமான சம்பவத்தில் ஆட்டோ ஓட்டும் கூலித் தொழிலாளி துரைப்பாண்டி என்பவர் உயிரிழந்தார் எனும் செய்தி கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிரிழந்த கூலித் தொழிலாளி துரைப்பாண்டி என்பவரின் குடும்பத்தின் வறுமைச் சூழ்நிலையைக் கருதி, அவரது இரண்டு குழந்தைகளையும் பராமரிப்பதற்காக அவரது மனைவி திருமதி சேதுராணி அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (21–2–2011) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.